19.03.2025
அசல் வழக்கு எண்: 117/2022

வா.சா.1 சாட்சி வேல்ராஜா இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

கையெழுத்து நிபுணருக்கு ஆய்வுக்கு அனுப்புவதற்கு எதிர்மனுதார் தாக்கல் செய்த மனுவிற்கு நான் எதிருரை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி மனுவில் உத்தரவு பிறப்பிக்கப்பட்டு நான் தாக்கல் செய்த வாடகை ஒப்பந்தம் கையெழுத்து நிபுணரால் ஆய்வு செய்யப்பட்டு ஆய்வு அறிக்கை நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட விபரம் எனக்கு தெரியும் என்றால் அறிக்கை நீதிமன்றத்திற்கு வந்த விபரம் தெரியும், ஆனால் அதில் என்ன சொல்லப்பட்டுள்ளது என்று தெரியாது. தற்போது வரை மேற்படி ஆய்வு அறிக்கையை பார்ப்பதற்கு நான் எந்தவொரு முயற்ச்சியும் மேற்கொள்ளவில்லை என்றால் அறிக்கையின் நகல் கேட்டு நகல் கோரும் மனு தாக்கல் செய்தேன். அந்த அறிக்கையின் நகல் நீதிமன்றத்திலிருந்து எனக்கு வழங்கப்பட்டது.

நானும் 1ம் பிரதிவாதியும் ஒரு வருடத்திற்குதான் வாடகை ஒப்பந்தம் ஏற்படுத்திகொண்டோம் என்றால் சரிதான். மேற்படி ஒப்பந்தம் முடிவடைந்த பிறகு வாய் மொழியாக வாடகை ஒப்பந்தத்தை நீட்டிப்பு செய்து கொண்டோம் என்றால் எழுத்து மூலமாக நீட்டிப்பு செய்தோம். எழுத்து மூலமாக வாடகை ஒப்பந்தத்தை நீட்டிப்பு செய்தோம் என்பதை எனது பிராதிலோ, நிரூபண வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் ஞாபகம் இல்லை. எழுத்து மூலமாக வாடகை ஒப்பந்தத்தை நீட்டிப்பு செய்ததற்கான ஆவணம் எதுவும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாக்கல் செய்துள்ளேன். நான் அவ்வாறு எந்தவொரு ஆவணமும் தாக்கல்

செய்யவில்லை என்றாலும் தாக்கல் செய்யதுள்ளேன் என்று பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. ஒரு வருடத்திற்கான எழுத்து மூல வாடகை ஒப்பந்தம் முடிந்த பிறகு மேலும் ஒரு வருடத்திற்கு நான் வாய் மொழியாகத்தான் வாடகை ஒப்பந்தத்தை நீட்டிப்பு செய்ய கேட்டேன் என்றாலும் அதன் அடிப்படையில் 1ம் பிரதிவாதி ஒரு வருட காலத்திற்கு வாய் மொழியாக நீட்டிப்பு செய்தார் என்றாலும் சரியல்ல.

மேற்படி காலத்தில் நான் சரிவர வாடகை செலுத்தாமல் நான் செலுத்தவேண்டிய வாடகையான மாத வாடகை ரூ.4,700/– வீதம் 6 மாத வாடகை பாக்கி ரூ.28,200/– இருந்தது என்றும் அதனை 1ம் பிரதிவாதியிடம் செலுத்தவும் தாவா சொத்தின் காலி சுவாதீனத்தை 1ம் பிரதிவாதியிடம் ஒப்படைக்கவும் வாய்மொழியாக கேட்டார் என்றாலும் சரியல்ல. மேற்கண்டவாறு 1ம் பிரதிவாதி வாடகை பாக்கியையும், காலி சுவாதீனத்தையும் கேட்டார் என்றாலும் நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் அப்போது எனது குழந்தைகள் படித்து கொண்டிருக்கும் காரணத்தினால் வாடகை பாக்கியை கொடுத்துவிட்டு, மாத வாடகையாக ரூ.5,200/– வீதம் கொடுப்பதாக ஒப்புக்கொண்டு குடியிருக்க அனுமதி கேட்டேன் என்றாலும் அதற்கு 1ம் பிரதிவாதி ஒப்புக்கொண்டுள்ளார் என்றாலும் சரியல்ல.

அதன் பிறகும் தாவா சொத்துக்குரிய வாடகை தொகை 1ம் பிரதிவாதியிடம் சரிவர கொடுக்காததால் தாவா சொத்தின் காலி சுவாதீனத்தை 1ம் பிரதிவாதியிடம் ஒப்படைக்குமாறு கேட்டார் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி வாடகை பாக்கியை கேட்டதால்தான் கடந்த 14.04.2022ம் தேதி 1ம் பிரதிவாதி என்னை வீட்டை விட்டு காலி செய்ய சொல்லி மிரட்டினார் என்று எனது பிராதிலும், நிரூபண வாக்குமூலத்திலும் பொய்யாக சொல்லியுள்ளேன்

என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் எந்த காலத்திலும் சட்ட விரோதமாக என்னை காலி செய்ய சொல்லவில்லை என்றாலும் என்னை சட்ட விரோதமாக காலி செய்ய சொன்னதாக நான் திருநகர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் நானும் 1ம் பிரதிவாதி சேர்ந்து உறுதிமொழி பத்திரம் எழுதிகொண்டதாக கூறியுள்ளேன் என்றாலும் ஆனால் என்ன உறுதிமொழி எழுதப்பட்டது என்று நிரூபண வாக்குமூலத்தில் சொல்லப்படவில்லை என்றாலும் ஞாபகம் இல்லை. 1ம் பிரதிவாதி எந்தவித உறுதிமொழி பத்திரமும் எழுதிகொடுக்கவில்லை என்றாலும் நானே உறுதிமொழி பத்திரத்தை உற்பத்தி செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள உறுதிமொழி பத்திரமான வா.சா.ஆ7 ஆவணம் 1ம் பிரதிவாதியை எந்த வகையிலும் கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. காலவரையறை சட்டத்தின் அடிப்படையிலும், சாட்சிய சட்டத்தின் அடிப்படையிலும் வா.சா.ஆ. 7 ஆவணம் செல்லத்தக்கது அல்ல என்றாலும் சரியல்ல.

இந்த வழக்கை தாக்கல் செய்த பிறகு நான் 1ம் பிரதிவாதிக்கு கடந்த 02.05.2022ம் தேதி ஒரு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் ஞாபகம் இல்லை. நான் 02.05.2022ம் தேதி 1ம் பிரதிவாதிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன் என்றாலும் தற்போது ஞாபகம் இல்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. கடந்த 06.05.2022ம் தேதி 1ம் பிரதிவாதி நான் செலுத்தவேண்டிய வாடகை தொகையை குறிப்பிட்டு ஒரு பதில் அறிவிப்பு அனுப்பினார் என்றால் ஞாபகம் இல்லை. 1ம் பிரதிவாதி 06.05.2022ம் தேதி பதில் அறிவிப்பு அனுப்பினார் என்றாலும் நான்

வேண்டுமென்று ஞாபகம் இல்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் தாவா சொத்தின் காலி சுவாதீனத்தை ஒப்படைக்கவேண்டும் என்றும், எனக்கும் 1ம் பிரதிவாதிக்கும் இடையே இருந்த வாடகைதாரர் – உரிமையாளர் என்ற உறவை மேற்படி பதில் அறிவிப்பு மூலமாக ரத்து செய்வதாகவும் குறிப்பிட்டு பதில் அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி மேற்படி அறிவிப்பு மூலமாக வாடகைதாரர் – உரிமையாளர் என்ற உறவை ரத்து செய்துவிட்டதால் நான் வாடகைதாரர் என்ற அடிப்படையில் எந்தவொரு உரிமையும் கோர முடியாது என்றால் சரியல்ல.

பிரதிவாதிகள் சட்டவிரோதமாக என்னை காலி செய்ய முயற்சி செய்யவில்லை என்றாலும் நான் சட்டத்திலிருந்து தப்பிப்பதற்காக பிரதிவாதிகள் என்னை மிரட்டியதாக கடந்த 21.04.2022ம் தேதி திருநகர் காவல் நிலையத்தில் ஒரு பொய்யான புகாரை கொடுத்துள்ளேன் என்றாலும் சரியல்ல. என்னை தாவா சொத்திலிருந்து காலி செய்து சுவாதீனத்தை 1ம் பிரதிவாதியிடம் ஒப்படைக்க கேட்டு 1ம் பிரதிவாதி என் மீது RLT.OP.No.11/2022 வழக்கு இதே நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். இந்த வழக்கை தாக்கல் செய்த பிறகு தப்பிப்பதற்காக பிரதிவாதிகள் மேற்படி மனுவை தாக்கல் செய்துள்ளார்கள். பிரதிவாதிகள் வயதானவர்கள் என்பதால் அவர்களை எப்படியாவது ஏமாற்றி தாவா சொத்தை அபகரிக்கவேண்டும் என்ற எண்ணத்தில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி கடந்த 06.05.2022ம் தேதி அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு மூலமாக வாடகை ஒப்பந்தத்தை ரத்து செய்த பிறகு நான் சட்டவிரோதமாக தாவா சொத்தில் குடியிருந்து வருவதாகவும்,

சட்டத்திலிருந்து தப்பிப்பதற்காகவும் பிரதிவாதிகளிடமிருந்து தப்பிப்பதற்காகவும் பொய்யான விபரங்களை கூறியும், பொய்யான ஆவணங்களை தயார் செய்தும் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த வழக்கு எடுத்தஎடுப்பிலேயே தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. நான் எந்த பரிகாரமும் கேட்பதற்கு தகுதியற்றவர் என்றால் சரியல்ல.